## வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
### ந.க.எண்.2614/ஆ5/2023, நாள்.11.07.2023

*****

பொருள் பள்ளிக் கல்வி – தாய் தமிழ் நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய சூலை 18–ம் நாளினையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டமை – "தமிழ்நாடு நாள் விழா" கொண்டாடுதல் – 6–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை

1. 30.10.2021ம் நாளிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்திக்குறிப்பு எண். 988
2. அரசாணை (நிலை) எண். 101, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ1.1) துறை நாள். 30.06.2023
3. வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.400/2023, நாள். 05.07.2023 (இவ்வலுவலகம் பெறப்பட்ட நாள்.06.07.2023)
4. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் (இடைநிலைக் கல்வி) கடித ந.க.எண்.1802/ஆ5/2023, நாள். 11.07.2023

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்திக் குறிப்பு எண். 988 நாள். 30.10.2021–ன் படி தாய்த் தமிழ் நாட்டிற்கு "தமிழ்நாடு" என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18–ம் நாளினையே "தமிழ்நாடு நாளாக" இனி கொண்டாடப்படும் என அறிவிக்கப்பெற்றது. அவ்வறிவிப்பினை செயல்படுத்துவதற்காக மாவட்டங்களில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் சார்பாக 10.07.2023 அன்று அந்தந்த வட்டார அளவில் போட்டிகள் நடத்தப்பட்டது. பார்வை 4–ல் காணும் கடிதப்படி பெறப்பட்ட வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் (இணைக்கப்பட்டுள்ளது) 12.07.2023 அன்று முற்பகல் 9.30 மணியளவில் காட்பாடி, அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி வளாகக் கூட்ட அரங்களில் நடைபெறும் மாவட்ட அளவிலான போட்டியில் கலந்துகொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. படிவம்
2. விதிமுறைகள்
3. வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்

11/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

11-07-23

பெறுநர் –
சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–
1) வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2) மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தனியார் / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.